தொகுதி 8] [பகுதி 7

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சுபானு ௵ ஐப்பசி ௴
OCTOBER 1943

பிரசுர கர்த்தர்கள் :

தென் . இந்திய ஆசிரியர் சங்கம்
520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. வெள்ளி 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்


பக்கம்

1. 50 வருஷ தேசியக் கல்வித் திட்டம் .... .... .... 395

2. வெற்றிக்குப் பின் :—1. கல்வி .... .... .... 397

—ராவ்பகதூர் ஸ்ரீ எஸ். கே. யக்ஞநாராயணய்யர், எம். ஏ.

3. பாடசாலையும் முதியோர் கல்வியும் .... .... .... 401

—ரெவரெண்டு ஏ. அருள் தங்கையா

4. செய்தித் திரட்டு .... .... .... 405

5. பத்திராதிபர் குறிப்பு .... .... .... 411


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1943 அக்டோபர் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 7/19.
செங்கற்பட்டு — Ch. 5, 8.
வட ஆற்காடு — NA. 26—A, 32, 35—A, 61.
தென்னாற்காடு — SA. 16.
தஞ்சாவூர் — Tan. 3, 26, 47, 62.
திருச்சி — Tri. 39
ராமநாதபுரம் — Rd. 45.
மதுரை — Md. 20.
திருநெல்வேலி — Tin. 58.
சேலம் — S. 15, 43.
கோயமுத்தூர் — Co. 32, 51.

குறிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்

# பாலர் கல்வி

| தொகுதி 8 | 1943 ஸு அக்டோபர் மீ<br>ஸுபாநு ஸு ஐப்பசி மீ | பகுதி 7 |
| --- | --- | --- |

## 50 வருஷ தேசியக் கல்வித் திட்டம்

### மத்திய கல்வி ஆலோசனை போர்டில் ஸ்ரீ சார்ஜண்ட் யாதாஸ்து

இந்தியாவிலுள்ள குழந்தைகளுக் கெல்லாம் அடிப்படையான கல்வியை அளித்து, அவர்களில் ஊக்கமுள்ளவர்களுக்கு கல்லூரிகளிலும், தொழிற் கல்வி சாலைகளிலும் பயிற்சி யளிக்கும்படியான தேசியக் கல்வித் திட்டமொன்றை இந்திய சர்க்கார் கல்வி ஆலோசகர் ஸ்ரீ சார்ஜண்ட், தனது யாதாஸ்து ஒன்றில் விவரித்திருக்கிறார். டேராடூனில் 13, 14, 15 தேதிகளில் நடைபெற்ற மத்திய கல்வி ஆலோசனை போர்டு விசேஷ கூட்டத்தில் இத்திட்டம் யுத்தத்துக்குப் பின் கையாளும் புனரமைப்பு வேலைகளிலொன்றாக விவாதிக்கப்பட்டது.

### 18 லட்சம் ஆசிரியர்கள் தேவை

இத்திட்டம் இந்தியா பூராவும் வெற்றிகரமாகப் பரவுவதற்கு சுமார் 50 வருஷமாவது பிடிக்கும். இத்திட்டத்திற்கு வருஷமொன்றுக்கு 313 கோடி ரூபா செலவாகும் 520 லட்சம் குழந்தைகளுக்கு கல்வியளிக்க சுமார் 18 லட்சம் ஆசிரியர்கள் தேவையாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 5 மாணவர்களுள் ஒருவருக்கு உயர்தர பள்ளிக்குப் போய்ச் சேர திட்டப்படி வசதி யளிக்கப்படும். ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்களும், இலவச இடவசதி தர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சர்வ கலாசாலைகளில் இத்திட்டப்படி இப்பொழுதிருப்பதை விட இரட்டிப்பு வசதிகள் ஏற்படுத்தவேண்டியிருக்கும். சர்வ கலாசாலைகளில் இன்னும் 2,40,000 ஸீட்டுகள் அதிகப்படுத்தவேண்டி யிருக்கும்.

### வயது முதிர்ந்தவர்களுக்கு

வயதானவர்களின் கல்வியின்மையைப் போக்க 20 வருஷ திட்டமொன்று வகுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் அமுலுக்கு [illegible]

னர், 5 வருஷ தயாரிப்பு திட்டமொன்றைக் கொண்டுவந்து வயது முதிர்ந்தவர்களுக்கு இதில் பயிற்சி யளிக்கப்படும். இத்திட்டம் பலனளிப்பதற்காக வேண்டி நியமிக்கப்படும் புது ஆசிரியர்களுக்குப் பயிற்சிக் கல்லூரிகள் ஆங்காங்கு அமைக்கப்பட வேண்டும்.

## வைத்தியப் பரிசீலனை

மாணவர்களைத் திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ள அவ்வப்பொழுது வைத்தியப் பரிசீலனை அவசியம். இதற்காக 7,500 வைத்திய அதிகாரிகளும், 15,000 நர்ஸ்களும் தேவையாகஇருக்கும்.

## வார்தா கல்வி முறை

6 முதல் 14 வயது வரையுள்ள எல்லாச் சிறுவர் சிறுமிகளுக்கு கட்டாய இலவச கல்வி யளிக்கப்படும். மத்திய ஆலோசனை போர்டு நடவடிக்கையை யொட்டியும், வார்தா போதனமுறை திட்டத்தை ஒட்டியும் கல்விப் பயிற்சி யளிக்கப்படும்.

வாலிபர்களுக்கு உத்ஸாகமளிக்கக் கூடியதும், சமூக சேவையில் சேர்க்கக்கூடியதுமான ஒரு இயக்கம் ஆரம்பிக்கப்படவேண்டுமென்றும் அத்திட்டம் கூறுகிறது. ஒய். எம். ஸி. ஏ. ராமகிருஷ்ண மிஷன் இவைகளை பிரயோஜன மற்றதாக செய்யும் முறையில் இவைகள் அமைக்கப்படக் கூடாதென்றும், ஆனல் அம்மாதிரி ஸ்தாபனங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் யோசனை கூறப்பட்டிருக்கிறது.

கிண்டர்கார்டன் கல்வி போதனமுறை உபாத்தியாயினிகளிடமே விட்டு வைக்கவேண்டுமென்று அத் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. சாதா கல்வியும், தொழிற் கல்வியும் சொல்லிக் கொடுக்கும் இருவித உயர்தரப் பள்ளிகள் அத்திட்டத்தில் அடங்கி யிருக்கின்றன.

அதிக ஜனத்தொகை கொண்ட பெரிய நாடாகிய இந்தியாவில் இப்பொழுதுள்ள சர்வ கலாசாலைகளின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு என்று சார்ஜண்ட் எண்ணுகிறார்.

ஸ்ரீ சார்ஜண்ட் திட்டத்துக்கு மத்திய போர்டு ஆதரவளித்துள்ளது. இனி சர்வ கலாசாலைகள் போர்டுகளில் இது ஆலோசிக்கப்படும். வருகிற ஜனவரி மாதம் மத்திய ஆலோசனை போர்டார் மறுபடியும் கூடி ஆலோசித்து இப்புதிய திட்டத்தை உருவாக்குவார்கள்.

திட்டத்தை நடத்திவைக்க சர்க்கார் ஜனங்களைப் புதுக் கடன் கேட்கலாமென்று ஸ்ரீ சார்ஜண்ட் தெரிவித்தார். மிகுந்த முன்னேற்றமடைந்த நாடுகளுடன் இந்தியாவும் வருங் காலத்தில் சம அந்தஸ்து இத் திட்டம் ரொம்பவும் உதவியாக இருக்குமென்று நம்புவதாக அவர் கூறினர்.

—பாரத தேவி.

# வெற்றிக்குப் பின் :—(1) கல்வி

ராவ் பகதூர் ஸ்ரீ எஸ். கே. யக்ஞ நாராயணய்யர் எம். ஏ.

இப்பொழுது நடக்கும் மகா யுத்தத்துக்கும், 1914 முதல் 18வரை நடந்த உலக யுத்தம் நம்பர் 1-க்கும் வித்தியாசங்கள் அநேகம் உண்டு அவைகளில் முக்கியமானது, போன தடவை யுத்தம் நடந்துகொண்டிருக்கும் வேளையில், எல்லோரும் யுத்தத்திலேயே கவனமாயிருந்தார்கள். யுத்தம் முடிந்தபின் என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி, முக்கியஸ்தர்கள் யோஜிக்கவில்லை. அதன் பலனாக, வெற்றியடைந்த நமது கக்ஷிகூட, பலவித துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. இந்த யுத்தத்தில், நேசகக்ஷிக்காரர்கள் முன்போல் ஏமாந்து போய்விடாமல், முன் ஜாக்கிரதை செய்துகொண்டிருக்கிறார்கள். யுத்தத்தில் வெற்றி பெற ஆட்கள், தளவாடங்கள், பணம், இவைகளைச் சேகரம் செய்து ஜயம்பெற, விடாமுயற்சிகள் நடைபெறுவதுடன், வெற்றிக்குப் பின் என்ன செய்யவேண்டியது என்பதையும், பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட், மந்திரி சர்ச்சில் முதலிய பெரியோர்கள் தீவிரமாக கவனித்து வருகிறார்கள். 'வெற்றிக்குப் பின்' என்று சொல்வதினால் வெற்றி நமக்குத்தான் என்பதில் சந்தேகம் இல்லை, இந்த விஷயத்தில் நமது எதிரிகளுக்குக் கூட, சந்தேகத்துக்கு இப்பொழுது இடமே இல்லை.

வெற்றிக்குப் பின் செய்யவேண்டியது என்னவென்று யோஜிக்க வேண்டிய விஷயங்கள் பல. நம் ராஜ்யத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டால், நமது விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளை விருத்தி செய்து, நமது பொருள் நிலைமையை எப்படிச் சீர்திருத்தலாம் என்பது முக்கிய பிரச்னையாகும். அதுபோலவே, மற்றத் துறைகளிலும் எப்படி அபிவிருத்தி அடைவது என்று யோஜிக்கவேண்டும். இம்மாதிரி விஷயங்களில், யுத்தம் செய்யாமல் மனிதர்கள் தங்கள் வியவகாரங்களை நடத்திவர அவர்களுக்கு உதவி செய்யும் புது கல்வி முறையை அனுஷ்டானத்தில் கொண்டுவருவது மிக முக்கியமானது. நமது குழந்தைகள், பயம் இன்றி தலைநிமிர்ந்து உலகில் வாழ பள்ளிக்கூடங்களில் கல்வி பயலவேண்டும்.

இவ்வுலகில் பல சதவர்ஷங்களுக்கு முன் வாழ்ந்துவந்த பெரியோர்களில் சிலர், இப்பொழுது இந்த உலக நிலையை பார்க்க எழுந்தருளினால், அவர்கள் மனம் எப்படியிருக்கும் என்று யோஜித்துப்பாருங்கள். இப்பொழுது மனிதன் விமானங்களில் ஏறி ஆகாசத்தில் பக்ஷி போல் பறக்கிறான். மீன்போல் ஜலத்தினுள் வெகுதூரம் போகிறான். ரயில், மோட்டார் முதலியவைகளின் உதவியால் ஒரு இடத்திலிருந்து

மற்றோரிடத்துக்கு வெகு சீக்கிரம் செல்கிறான். ரேடியோவின் உதவியால் பதினாயிரம் மைலுக்கு அப்பால் நடக்கும் விஷயங்களை அதே நிமிஷத்தில் தெரிந்துகொள்ளுகிறான். இவைகளைப் பார்த்து முன் காலப் பெரியோர்களில் சிலர் ஆச்சரியமடையலாம். ஆனால், புத்த பகவான், யேசுநாதர், மகம்மத் நபி, முதலிய தர்ம ஸ்தாபகர்களும், நல்லொழுக்கம் உலகில் எங்கும் பரவச் செய்ய முயன்ற அசோகன் முதலிய சக்கிரவர்த்திகளும் நமது போர் முனைகளைப் பார்த்தால் 'அய்யோ' என்றலறுவார்கள். அவர்களின் மனம் துடிக்கும். 'மனிதனின் மிருகத்தன்மை இன்னம் போகவில்லையே, இந்த மூடர்கள் மண்ணாசை பொன்னாசைகளால் வதைக்கப்பட்டு, ஒருவருக்கொருவர் பல்லாயிரக்கணக்கால் கொன்று மடிகின்றார்களே' என்று பரிதவிப்பார்கள். சந்தேகமில்லை.

சென்ற நாலு ஐந்து நூற்றாண்டுகளாக, அதிலும் முக்கியமாக சென்ற நூறு வருஷங்களுக்குள் விஞ்ஞான சாஸ்திரங்கள் அத்தியாச்சர்யமாய் அபிவிருத்தியை அடைந்திருக்கின்றன. மனிதன் கற்றுக்கொண்டதெல்லாம் இவ்வளவோடு நின்றுவிட்டாலும் இதைமாத்திரம் உபயோகித்து இப்பொழுது பூமியிலிருக்கும் 200 கோடி ஜனங்களுக்கும் வறுமையின்றி ஸுகமாக ஜீவனம் செய்யலாம். இவ்விருநூறு கோடி ஜனங்களுக்கும் உண்ண உணவு, கட்டிக்க ஆடை, இருக்க வீடு, இவைகளுக்கு வேண்டிய பொருள்கள் உற்பத்தி செய்வது எளிது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் உலகத்திலிருக்கும் மாந்தர்கள் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்து தேவையான சாமான்களை உற்பத்தி செய்து அவைகளை நியாயமாய் விதரணம் செய்து ஒரு குடும்பத்தினரைப்போல் ஏன் ஸௌக்யமாய் வாழக்கூடாது என்பது தான் கேள்வி. அதுக்குத்தான் பதில் தேடவேண்டும்.

சாஸ்திரங்கள் அபிவிருத்தியாவதற்குமுன் உலகத்திலுள்ள பதார்த்தங்களுக்கு மனித சங்கங்கள் சண்டை போட்டுக்கொண்டேயிருந்தன. போட்டியும் சண்டையுமே மனித தர்மமாக இருந்தது. உலக சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் இதற்கு முன் நடந்த மகா யுத்தங்களுக்கும் இப்பொழுது நடைபெறும் யுத்தத்துக்கும் மூலகாரணம் ஒன்றேதான். 'அந்த தேசத்துக்கு நிறைய இடம் இருக்கிறது. பொருள் இருக்கிறது. நம் தேசம் செழிப்பற்று வறுமையால் வருந்துகிறது. அதினால் நாம் அத்தேசத்தின்மேல் படையெடுத்து அதை நம் கீழ் ஆக்கவேண்டும்' என்ற நோக்கம்தான் எல்லா யுத்தங்களுக்கும் காரணம். ஒரு தேசத்தைச் சேர்ந்த பிரஜைகளில் ஒவ்வொருவனும் தன் தேசத்தைக் கையாளும் முறை நியாயமானாலும் அநியாயமானாலும் தேசாபிமானத்துடன், அதன்பொருட்டு உயிரைக்கூட பலிகொடுக்கத் தயாராக இருக்கவேண்டுமென்று கற்பிக்கப்பட்டான். இதைத்தான் சிறுவர் சிறுமிகளும் பள்ளிக்கூடங்களில் கற்று வந்தார்கள். இந்த மனப்பான்மையுடனேதான் சிறுவர்கள் வளர்ந்து வந்தார்கள்.

'தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்ற பழமொழி மனித சுபாவத்தில் ஓர் அரிய தத்துவத்தை வெளியிடுகின்றது. பல்லக்குக் கொம்பு வேண்டுமானால் மூங்கிலை இளமையிலேயே வளைத்துவிடவேண்டும். அதுபோலவே இனிமேல் உலகில் மனிதர்கள் சண்டை சச்சரவின்றி சகோதரபாவத்துடன் வாழவேண்டுமானால் 'அவ்வாழ்க்கையே மேலானது' என்கிற தத்துவத்தை சிறுவயதிலேயே குழந்தைகளுக்குப் புகட்டவேண்டும்; அவர்கள் அந்த மனப்பான்மையுடனேயே வளரவேண்டும். ஏதாவது விஷயங்களைப்பற்றி ஒருவருக்கொருவர் வித்தியாசம் ஏற்பட்டால், அதை மத்தியஸ்தம் செய்து சமாதானம் செய்துகொள்ளவேண்டும். அன்றி, லக்ஷக்கணக்காக மனிதர்களையும் கோடிக்கணக்காக பணத்தையும் பலி வாங்கும் யுத்தத்துக்கு, இருகக்ஷிகளும் முயலக்கூடாது. இந்த விஷயத்தை எல்லோரும் ஒத்துக்கொண்டு நமக்குப் பின்னால் வரும் தலைமுறைகளாவது நம்மைப்போல் கஷ்டப்படாமலிருக்க இப்பொழுதே முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். படிப்பு முறைகளைச் சீர்திருத்தி இளம்பிராயம் முதலே போட்டி நோக்கத்தை நீக்கி ஸகோதர பாவத்துடன் கூடிவாழும் மனப்பான்மையை வளர்க்க வேண்டும். அப்படி வளர்க்கப்பட்ட சிறியோர்கள் பெரியோர்களானால் உலகத்துக்கு க்ஷேமம்.

கல்வி முறையில் அடிப்படையாக இம்மாதிரி மாற்றம் ஏற்படாமல் போனால் உலகத்தின் கதி என்ன ஆகுமென்று நினைக்கவே மனம் பதறுகிறது. சாஸ்திரங்களின் அபிவிருத்தி வியவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் மாத்திரம் உபகாரமாயிருக்கவில்லை. விஷவாயு, பாம்புகள், மிகதூரம் போகும் குண்டுகள் முதலியவைகளின் உதவியால் உயிரையும் பொருள்களையும் அழிக்கும் திறமைகூட வலுத்துவருகிறது. இந்த ஸர்வ ஸம்ஹார சக்தி தடையின்றி வளர்ந்து வந்தால் உலகத்தின் கெதி என்னவாகும். இதை நினைத்துத்தான் பெயர் பெற்ற எச். ஜி. வெல்ஸ் என்னும் ஆசிரியர், **'The race is between Education and catastrophe.'** என்று சொன்னார். கல்வி முறையும் முழுநாசமும் பந்தய ஓட்டம் ஓடுகின்றனவாம். நல்ல ஜீவித மார்க்கத்தை உபதேசித்து அதைத் தழுவி நடக்க நம்மை யோக்கியதையுள்ளவராக்கும் கல்வி முறை இப்பந்தயத்தில் தோற்றுவிட்டால் மனித வர்க்கமே அழிந்துபோய் விடும் என்று இவர் சொல்லுகிறார். அதனால் கல்வி முறையில் சீர்திருத்தம் முக்கிய அவசியமென்று தெளிவாகிறது.

நம் நாட்டுப் பள்ளிக்கூடங்களையும் கல்வி முறைகளையும் ஆராய்ச்சி செய்து வெற்றிக்கப்புறம் இவைகளை எவ்விதமாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்று யோஜிப்பது மிகப் பெரிய விஷயம். ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயமாக சொல்லலாம். வேறு எந்த சீர்திருத்தங்கள் வந்தாலும் வராவிட்டாலும் சரி, முன் சொன்ன அடிப்படையான சீர்திருத்தம் வந்தே ஆகவேண்டும். நம் நாட்டுச் சிறுவர்களும்

சிறுமிகளும் ஒருவருக்கொருவர் அன்புடனும் சகோதர பாவத்துடனும் வாழ்வதுமன்றி பிற ராஜ்யத்திலிருப்பவருடனும் சமாதானமாக வாழ கற்கவேண்டும். 'பலவான் காரியம் ஜெயம்' என்பது மிருகத்தன்மையைக் காட்டுகிறது. பகுத்தறிவுள்ள மனிதர்களாகிய நாம் மிருக நிலையை விட்டு வெகுதூரம் முன்னேற்றம் அடைந்துவிட்டோம் என்பதுக்கு அறிகுறியாய் 'தர்மமே ஜெயம்' 'ஸத்தியமே ஜெயம்' என்ற மேலான தத்துவங்களைக் கையாளவேண்டும். இந்த மனப்பான்மை உலகில் வளரவேண்டுமானால் முதலாவது இந்த தத்துவம் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்டு அங்கேயே இம்முறை கையாளப் படவேண்டும். வேந்தனை வாழ்த்த வந்த ஔவையார் 'வரப்பு ஓங்க' என்று ஆசிர்வாதம் செய்தபின் வரப்பு ஓங்கினால் வேந்தன் ஓங்குவான் என்பதை எடுத்துக்காட்டினாளாம். அதுபோல உலகம் சுகமாய் வாழவேண்டுமானால் பள்ளிக்கூடங்களில் முன்சொன்னபடி நல்ல வாழ்க்கை முறைகள் கற்பிக்கப்படவேண்டும்.

* சென்னை அகில இந்திய ரேடியோவின் அனுமதியின்பேரில் பிரசுரம்.

---


புதிய நூல்!

# திரு அருள் மொழி

**மூவர் தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம்— இவைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 500 பாசுரங்கள் அடங்கியது.**

முதற் பாகத்தில் விரிவான பக்திசாரமும், இரண்டாம் பாகத்தில் பாசுரங்களும் அவைகட்கு உரையும் விளக்கக் குறிப்புகளும், மூன்றாம் பாகத்தில் அப் பாடல்களிலிருந்து திரட்டிய சிவ விஷ்ணு ஸஹஸ்ரநாம அகவல்களும் உள்ளன.

பக்கங்கள் : **600**

விலை சாதா ரூ. **2—14—0**

,, காலிகோ ரூ. **3—12—0**

| தபாற் கட்டணம் : | சாதா | காலிகோ |
|---|---|---|
| புக் போஸ்டு | அணா 5 | அணா 6 |
| ரிஜிஸ்டெர்ட் | ,, 8 | ,, 9 |

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்**, மயிலாப்பூர், சென்னை

# கிராமப் பாடசாலையும் முதியோர் கல்வியும்

By Rev. A. Arul Thangiah

இந்தியா கிராமங்கள் நிறைந்த நாடு. கிராமங்கள் முன்னேற்ற மடையாவிடில் நாடு முன்னேற்றமடையாது. கிராமங்கள் நன்முறையில் முன்னேற்ற மடையவேண்டுமாயின் பல துறைகளிலும் சீர்திருத்தம் ஏற்படுதல் வேண்டும். கிராமங்களைச் சீர்திருத்தக் கருதுவோர் கிராமத்தாரின் படிப்பைப்பற்றி முதன்மையாகக் கருதவேண்டும். கிராமத்திற்குப் படிப்பு ஊட்ட நிறுவப்பட்டிருக்கும் நிலயம் கிராமப்பாடசாலை. கிராமப் பாடசாலையே கிராமத்திலுள்ள கலைமகள் கோயிலாகும். அக்கோயில் இல்லாத ஊர் இருத்தலாகாது. இன்று நமது நாட்டிலுள்ள எல்லா ஊர்களிலும் பாடசாலைகள் இல்லை. 'வீடுதோறும் கலையின் விளக்கம், வீதிதோறும் இரண்டொரு பள்ளி' என்று பாரதியார் பாடியுள்ளார். நமது நாட்டிலுள்ள பெரிய ஊர்களுள் மூன்றில் இரண்டு ஊர்களில் பாடசாலைகளே இல்லை. சிற்றூர்களிலும் பாடசாலைகள் நடைபெறுமாறு செய்யவேண்டுவது அறிஞர் கடமையாகும்.

## நாட்டுமக்களின் எழுத்தறியா நிலைமை

இப்போது இருக்கும் கிராமப் பாடசாலைகள் சிறுவருக்குக் கல்வியூட்டும் பணியைச் செய்துவருகின்றன. கிராமப் பாடசாலை ஆசிரியன்மார் இடையூறுகளைப் பொருட்படுத்தாமல் பொறுமையாய் ஒப்பற்ற நாட்டுத்தொண்டு செய்து வருகின்றனர். பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகப் போவதில்லை. அமெரிக்காவில் மொத்த ஜனத்தொகையில் பள்ளிக்கூடத்துக்குப் போவோர் நூற்றுக்கு இருபத்தொருவர்; இங்கிலாந்தில் பதினெண்மர்; நமது இந்தியாவில் மூவரே. ஆதலால்தான் நமது நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூற்றிருவர் எழுத்தறிவு பெறாதாராக இருக்கின்றனர். இந்நிலை உலகுக்கே வியப்பூட்டுவதாகும். நமது நாட்டில் பேரறிஞர் முக்காலத்தில் வாழ்ந்தனர், இக்காலத்திலும் இருக்கின்றனர். கல்வி நிறைந்த நாடு என்று நமது நாடு போற்றப்படுகிறது. கலைகள் நிறைந்த நாடு என்று புகழப்படுகிறது. ஆயினும் இந்நாட்டு மக்களுள் நூற்றுக்கு எண்மரே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். இந்நிலை விரைவில் மாறுதலடைதல் வேண்டும். "நீட்டோலை வாசியா நின்றான் எழுத்தறியமாட்டாதவன் நன்மரம்" மரங்களைப் போன்றவர்கள் மக்களாகவேண்டும். 'கல்லாத மூடரைக் காணவும் ஆகாது' என்னும் சொல் பிறந்த நாடு நமது நாடு. "கல்லாது நிற்பார் பிறர் இன்மையின்

கல்வி முற்ற—வல்லாருமில்லை, அவை வல்லர் அல்லாருமில்லை '' என்று நமது நாட்டைப்பற்றி இக்காலத்திலும் சொல்லப்படுதல் வேண்டும். கிராமப் பாடசாலைகளுக்கு இக்காலத்திலுள்ள இளைஞர் யாவரும் ஒழுங்காய்ப்போய் ஐந்து ஆண்டுகளாவது கல்வி கற்றால் இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் எழுத்தறியார் தொகை மிகச் சுருங்கிவிடும்.

## முதியாரும் எழுத்தறிவு பெறல்வேண்டும்

அவ்வாறாயின் இக்காலத்தில் எழுத்தறியாதாராய் இருக்கும் முதியார் எழுத்தறிவு பெறவேண்டாமோ? அவர்கள் எழுத்தறிவுமட்டுமன்று வேறு பல்வகை அறிவும் பெறுதல் வேண்டும். இன்று எழுத்தறியாராய் இருப்பாருள் சிலர் தங்கள் இளமைக் காலத்தில் பாடசாலைகளுக்குப் போனவர்களே. அவர்கள் தாங்கள் படித்ததை மறந்துவிட்டார்கள். அவர்கள் திரும்பவும் படித்தல் வேண்டும். எனவே, படிப்பறியாத முதியார் புதிதாய்ப் படித்தல் வேண்டும், இளமையில் எழுத்தறிந்து பின்னர் மறந்துவிட்ட பெரியோர் மீண்டும் படித்தல் வேண்டும். கிராமப்பாடசாலையில் முதியார் படிப்பறிவதற்குச் செய்யக்கூடியது யாது?

## கிராமப்பாடசாலை ஆசிரியன்மார்

கிராமப்பாடசாலைகள் கலைமகள் கோயில்கள் என்று முன்னர்க் கூறினேன். இளைஞர்மட்டுமன்று, முதியாரும் அக்கோயில்களுக்குச் சென்று வழிபடுதல் வேண்டும். கிராமப் பாடசாலைகள் கிராமத்திலுள்ள யாவருக்கும் அறிவூட்டும் நிலையங்களாக விளங்குதல் வேண்டும். அவை கிராமத்திலுள்ள யாவருக்கும் எழுத்தறிவும் பொது அறிவும் ஊட்டுதல் வேண்டும். கிராமப்பாடசாலைகளிலுள்ள உபாத்திமாரே இப்பணியையும் செய்யமுடியுமா ? அவர்கள் பகல்முழுவதும் சிறுவருக்கு வருந்திப் படித்துக் கொடுக்கிறார்கள். அவர்கள் பெறும் ஊதியமோ மிகமிகக் குறைந்தது. அவர்களுக்கு ஓய்வு வேண்டும். அவர்கள் முதியாருக்குக் கல்வி பயிற்றுவிக்க முடியாது. ஆயினும் அவர்கள் செய்யக்கூடிய பணியொன்றுண்டு. பல கிராமங்களில் கிராமப் பாடசாலை உபாத்திமாரே அவ்வூரிலுள்ள மற்றையோரைவிட அதிகம்படித்தவர்களாகவும் பொது அறிவு படைத்தவர்களாகவும் இருப்பர். அவர்களே அவ்வூரின் கல்வி அதிகாரிகளாவர். ஆதலால் ஊரிலுள்ள கல்வி முயற்சிகள் யாவற்றையும் நடத்தும் தலைவர்களாக அவர்களே விளங்கவேண்டும். அத்தகைய முயற்சிகளெல்லாம் கிராமப் பாடசாலையிலேயே நடைபெறுதல்வேண்டும்.

## கிராம ஆசிரியன்மாரின் மேற்பார்வை

கிராமத்திலுள்ள எழுத்தறியார் யாவரென கிராமப் பாடசாலை ஆசிரியர்மார் தெரிந்துகொள்ள முயலலாம். கூடுமாயின், அவர்களது பெயர் அட்டவணையொன்று எழுதிவைத்துக்கொள்ளலாம். பின்னர் ஊரில் அவர்களுக்குப் படித்து

பிடித்தல் வேண்டும். அவ்வூரிலிருந்து வேறு ஊர்களுக்குப்போய் உயர் தரக் கல்விபெறும் மாணாக்கரைக் கோடை விடுமுறையில் இப்பணி செய்யப் பயன்படுத்தலாம். அதன் பிறகு பாடசாலையில் ஊர்ப்பொதுக் கூட்டம் ஒன்று கூட்டுவித்து யாவருக்கும் படிக்கவேண்டுமென்ற ஊக்கத்தை ஊட்டுதல் வேண்டும். சில ஊர்களில் ஊர்க்கட்டுப்பாடு ஒன்றுசெய்துகொள்ளமுடியும். பின்னர் இரவில் வகுப்புக்கள் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். அந்த வகுப்புக்களில் கிராமப் பாடசாலை ஆசிரியன்மார் படித்துக் கொடுக்கவேண்டுவதில்லை. ஆயினும், அவை கிராமப் பாடசாலையில் கிராமப் பாடசாலை ஆசிரியன் மாரின் மேற்பார்வையில் நடைபெறுதல் வேண்டும். அவ்வகுப்புக்களில் எழுத்தறிவு ஊட்டுவதே இக்காலத்தில் முதன்மையான பணியாய் இருத்தல் வேண்டும்.

## எழுத்தறிவு கல்விக்கு அடிப்படை

எழுத்தறிவு பொதுவாகப் பிற அறிவுக்கெல்லாம் அடிப்படையாகும். எழுத்தறியாதவர்களுக்குள்ளும் அறிவாளிகள் இருத்தல்கூடும். எழுத்தறியாதவர்களும் பலவித அறிவைக் காட்சியாலும் அநுபவத்தாலும் கேள்வியாலும் பெறமுடியும். எனினும் பொதுவாகக் கல்விக்கும் அறிவுக்கும் எழுத்தறிவே அடிப்படையாகும். எழுத்தறிவு இல்லாமலே அறிவு பெறக்கூடியவர்கள் எழுத்தறிவு பெறுவார்களாயின் மிகப் பன்மடங்கு விரைவாக அறிவு பெறமுடியும். எழுத்தறியாமை நமது நாட்டு முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாகும். ஆதலால் எழுத்தறியாமையை நாட்டைவிட்டு ஓட்டுவதே நமது முதன்மையான தொண்டாய் இருத்தல்வேண்டும். எழுத்தறியாத பெரியவர்களுக்கு எழுத்தறிவுஊட்டக்கூடிய எளிய முறைகள் வேண்டும். அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கும் முறைக்கும் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்கும் முறைக்கும் வேறுபாடு இருத்தல்வேண்டும். பெரியவர்களுக்குப் பல காரியங்களைப் பற்றிய அறிவு உண்டு. பல சொற்கள் அவர்களுக்குத் தெரியும். அவர்களது மன நிலைமை வேறு; பிள்ளைகளது மன நிலைமை வேறு. அவர்களை விருப்பமாய்ப் படிக்கச் செய்யவேண்டும்; விரைவாய்ப் படிக்கச் செய்ய வேண்டும்; படித்ததை மறவாதிருக்கச் செய்யவேண்டும். ஆதலால் நன்முறைபற்றி அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்குமாறு கிராம ஆசிரியன்மார் சொல்லிக் கொடுப்போருக்கு அறிவூட்டுதல் வேண்டும்.

## பெற்றோர் சங்கங்கள்

இடைக்கிடையே கிராமத்து மக்களையெல்லாம் கிராம ஆசிரியன்மார் பாடசாலையில் கூட்டுவித்துப் பொதுக் காரியங்களைப் பற்றி அவர்களுக்குச் சொல்லுதல் வேண்டும். பெற்றோர் சங்கம் ஏற்படுத்தி அச்சங்கம் மாதம் ஒரு முறையாவது கூடுமாறு ஏற்பாடு செய்தல்வேண்டும்.

அப்பெற்றோர் சங்கத்தில் பிள்ளைகள் கட்டுரைகள் படிக்கலாம், நாடகங்கள் நடிக்கலாம், பாட்டுக்கள் பாடலாம். இவை யாவும் பெற்றோருக்கு அறிவூட்டும். அதுவுமன்றி ஆசிரியன்மார் சொற்பொழிவுகள் நிகழ்த்தலாம்.

## பாடசாலைகள் போது அறிவு நிலையங்கள்

கிராமப் பாடசாலை இராப் பள்ளிக்கூடம் நடக்கும் இடமாக மட்டுமன்று, பொதுக்கூட்டங்கள் கூடும் இடமாக மட்டுமன்று, அது கிராமத்து நூல் நிலையமாகவும் வாசகசாலையாகவும் விளங்குதல் வேண்டும். கிராமத்தாருக்குப் பயன்படக்கூடிய எளிய நூல்கள் அங்கு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவர்கள் வாசிக்கக்கூடிய பத்திரிகைகளும் அங்கு வைக்கப்படுதல் வேண்டும். பாடசாலையின் ஒரு அறையை இவற்றிற்கெனப் பயன்படுத்தலாம். இல்லையேல் திண்ணையில் இருந்து வாசிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். எவ்வாறேனும், இளைஞர் மட்டுமல்ல, யாரும் பல்வகை அறிவையும் பெறுவதற்கு கிராமப் பாடசாலை உதவியா யிருத்தல் வேண்டும்; கிராமப் பாடசாலை ஆசிரியன்மார் அதற்கு வேண்டிய துணை செய்தல்வேண்டும். இத்தகைய பொதுப் பணி செய்யும் பாடசாலைகளுக்கு அதிகமான பொருளுதவி செய்யப் படும்படி கல்வி அதிகாரிகள் சிபார்சு செய்தல்வேண்டும். அரசாங்கம் இத்தகைய பாடசாலைகளுக்கு அதிகப் பொருள் சகாயஞ் செய்ய முன் வருதல் வேண்டும். அவ்வாறு அரசாங்கம் செய்தால்தான் எழுத்தறியாமை என்பது இல்லாதொழியும். கிராமப் பாடசாலைகள் வாழ்க! கிராம ஆசிரியர்கள் வாழ்க!

# செய்தித் திரட்டு

---

அக்பராபாத் பாடசாலை, கோடம்பாக்கம்,

செப்டம்பர்மீ 2, 9, 16 தேதிகளில் ஜீவகாருண்யம், சிநேகம், மாணவர் கடமையும் பெற்றோர் கடமையும், என்பனபற்றி உபந்நியாசங்களும், 17-9-43ல் யுத்த நிலையக்கண்காட்சியும், 8-10-43ல் சரஸ்வதி பூஜையும் பஜனையும் நடைபெற்றன.

---

ஆரம்ப ஆசிரியர் சங்கம், குன்றத்தூர் சென்டர்.

11-9-43ல், திரு பெரியண்ணன் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. தண்டலம் போர்டு பாடசாலை பெண் குழந்தைகளால் யுத்தப் பாடல்கள், கும்மி, கோலாட்டம், ஜோதி டான்ஸ் முதலியவை நடைபெற்றன. தலைவர், மேலும்உயர்ந்த நீதிகள் தெய்வத்தன்மை முதலியவைகளால் குழந்தைகள் நாட்டுக்கு நலத்தை நல்கும் பிரஜைகளாக இருப்பார்கள் என்று சொல்லி வாழ்த்தினர். யுத்தத்திற்கு உதவி செய்யக்கூடிய மார்க்கங்களைப்பற்றி காரியதரிசி தெரிவித்தார்.

---

ஆரம்ப ஆசிரியர் சங்கம், ஸ்ரீபெரும்புத்தூர்.

25-9-43ல் சங்கத்தலைவர் ஸ்ரீ வைத்தியநாதன் தலைமையில் கூடிற்று. தேசியப் போர்முனை, யுத்த பாண்டுகள், இந்தியாவின் தற்காப்பு முதலியவைபற்றி உபந்நியாசங்கள் நடைபெற்றன.

---

இந்துமத பாடசாலை, வாலாஜாபாத்.

27-9-43ல், சென்னை டாக்டர் எஸ். சிவசுப்ரமணிய முதலியார் தமது பெற்றோர்கள் நினைவாக இப்பாடசாலையில் மாணவர் ஆசிரியர் உள்பட சுமார் 700 பேருக்கு விருந்து அளிக்கும்படி ரூ. 100 கொடை அளித்தார்!

---

ஆரம்ப ஆசிரியர் சங்கம், கோவிலூர்.

11-9-43ல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ராஜாராமய்யர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. 1 முதல் 5 வகுப்புவரை பூகோளம் கற்பிக்கும் முறையை விளக்கிக் காட்டினர். பிற்பகலில் பெற்றோர் சங்கக் கூட்டத்தில் யுத்தத்திற்கு சகாயம் செய்யவேண்டிய வழிகளைப்பற்றிச் சொன்னர்.

---

ஆரம்ப ஆசிரியர் சங்கம், தண்டராம்பட்டு.

18-9-43ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ பாலகிருஷ்ணநாயுடு தலைமையில் கூடிற்று. என் னிளையாட்டும், பெற்றோர் சங்கமும் ஆசிரியர்களும்

என்பதுபற்றி உபந்நியாசமும் நடைபெற்றன. பின்பு. யுத்த அலவன்ஸை 1-3-43 முதல் கொடுத்துதவும்படி கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், காட்பாடி.

9-10-43ல், திரு. நாகராஜன் தலைமையில், கோயமுத்தூருக்கு மாற்றப்பட்டுப் போகும் ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் திரு. ராஜவிநாயகத்துக்குப் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது. எல்லாரும் அவருடைய நற்குணங்களைப் பாராட்டிப் பேசினர்.

---

## கண்டமங்கலம் ஆரம்ப ஆசிரியர் சங்கம், வழுதாவூர்.

18-9-43ல், ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் தலைமையில் கூடிற்று மாணவர்களால், 'ஹிட்லரின் சரணாகதி' என்ற நாடகமும், மாணவிகளால் கும்மி முதலியவும் நடைபெற்றன.

---

## ஸி. ஸி. உயர்தர ஆரம்ப பாடசாலை, திண்டிவனம்.

24-9-43ல் பெற்றோர் சங்கக் கூட்டம் நடைபெற்றது. 100க்கு மேல்பட்ட தாய்மார்கள் வந்திருந்தனர். இது ஸ்திரீகளால் பிரத்யேகமாக நடத்தப்பட்ட முதற்கூட்டமாகும். பாடசாலையில் சிறுமிகளால் பரதநாட்டியம், கும்மி, சங்கீதம், சம்பாஷணை முதலியவை நடைபெற்றன. வந்திருந்த தாய்மார்களில் பலர் பாடசாலையின் அபிவிருத்தியைப் பாராட்டி பேசினர்.

---

## உபாத்திமைச் சங்கம், பள்ளிப்பாளையம்.

25-9-43ல் சாதாரணக் கூட்டம் நடைபெற்றது மாணவர் சங்கங்களின் நன்மைகள் என்பதுபற்றிப் பேசப்பட்டது. ஒய். எம். ஸி.ஏ. தலைமை ஆசிரியர் பக்துரையின் அகால மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டது.

---

## போர்டு ஆரம்ப ஆசிரியர் சங்கம், குன்னத்தூர்.

25-9-43ல் மாத மீட்டிங் நடைபெற்றது. தலைமை உபாத்தியாயர் பழனிமலை தலைமை வகித்தார். சாலையின் வசதிகளும், சுகாதாரவிளையாட்டுகளும் என்பதுபற்றி ஆசிரியர்களால் விவரித்துக் காட்டப்பட்டது.

---

## எஸ். ஆர். எம். இராமனாதன் செட்டியார் ஹைஸ்கூல், நாட்டரசன்கோட்டை.

28-9-43ல் இப்பள்ளியின் ஆண்டுவிழாவும், பள்ளிக்கூட சங்கங்களின் ஆண்டுவிழாக்களும், சிவகங்கை ஜில்லா முன்ஸீப் ஸ்ரீ தாமோதர

ராவ் தலைமையில் கொண்டாடப்பட்டன. 'ஹிட்லரின் வீழ்ச்சி' என்பதை நடித்தும், இரவில் 'இராவண பக்தி' என்ற நாடகமும் நடைபெற்றன. ஸ்ரீ தாமோதர ராவின் ஸகதர்மிணி பரிசுகளை வழங்கினார்கள்.

---

## போர்டு ஆரம்பபாடசாலை, காரிப்பட்டி

8—9—43-ல், R. D. O. தலைமையில், 'சடுகுடு' விளையாட்டு நடந்தது. ஏராளமான ஜனங்களும், உத்தியோகஸ்தர்களும் ஆஜராயிருந்தனர். கல்வியின் அவசியத்தைப்பற்றியும், யுத்தநிலைமையைப் பற்றியும், உபந்நியாசங்கள் நடைபெற்றன.

---

## திருச்செங்கோடு தாலூகா, போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், சங்கரிதுர்க்கம்

19—9—43-ல், ஸ்ரீ வெங்கட்டராமய்யர் தலைமையில் கூடிற்று. யுத்த அலவன்ஸ், சம்பளதிட்டம், அரிசி, மண்ணெண்ணை சப்ளை, ப்யூன் நியமனம், முதலியனபற்றிப் பல்தீர்மானங்கள் நிறைவேறின.

---

## ஆரம்ப ஆசிரியர்சங்கம், அம்மாபேட்டை

18—9—43 ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ரகுநாதாச்சாரியார் தலைமையில் பெற்றோர் சங்கம் நடைபெற்றது. மாணவமாணவிகளால் 'ஹிட்லர் சரணாகதி' என்ற நாடகம் நடிக்கப்பட்டது. சினிமா நடிகர் ஜோக்கர் ராமுடுவின் விகடக் கச்சேரி நடைபெற்றது. தலைவர் எல்லாரையும் பாராட்டிப் பேசினார்.

---

## பாலசரஸ்வதி கல்லூரி, கருந்தட்டாங்குடி (தஞ்சாவூர்)

7—10—43-ல், ஸ்ரீ வி. குருசுவாமி சாஸ்திரிகள் தலைமையில் சரஸ்வதிபூஜை நடைபெற்றது. தெலுங்குபண்டிதர் ஸ்ரீ பாலசுப்ரமணிய சாஸ்திரிகள் நவராத்ரியும் சரஸ்வதிபூஜையும் என்பதுபற்றி உபந்நியாசம் செய்தார்.

---

## ஆரம்பபாடசாலை, ஸ்ரீவாஞ்சியம்

28—9—43-ல், பெற்றோர் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ. எஸ். எஸ். நடராஜன் தலைமை வகித்தார். 'யுத்தமும் நமது கடமையும்' என்பதுபற்றி உபந்நியாசம் நடைபெற்றது.

7-10-43 ல் சரஸ்வதி பூஜை விசேஷமாகக் கொண்டாடப்பட்டது.

---

## டவுன் ஆரம்ப ஆசிரியர் சங்கம், தஞ்சாவூர்

28—8—43-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. உமாகாந்தம் தலைமையில் கூடிற்று. டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கோபாலய்யர் பூகோளபாடம் போதித்தல் என்பது பற்றிவிரிவாகப் பேசினார்.

25—9—43-ல், கீழலங்கம் சுவாமிநாதய்யர் தலைமையில் கூடிற்று. டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ உமாகாந்தம் முதல் வகுப்பு மாணவர்கட்கு தாய்பாஷை போதித்தல் என்பதுபற்றி விரிவாகப் பேசினார்.

9—10—43-ல், ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீபட்டாபிராம சாஸ்திரி கள் தலைமையில் கூடிற்று. தற்காலயுத்தமும் ஆசிரியர்கடமையும் என் பதுபற்றி ஸ்ரீ சீதாராமன் பேசினார். பின்னர் யுத்தநிழல்படக்காட்சி நடைபெற்றது.

---

## திருச்செந்தூர் தாலூகா ஆரம்ப ஆசிரியர் மகாநாடு

17—9—43-ல், **Rev. Fr.** செக்யூரா தலைமையில் கூடிற்று. தாலூ காவின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் 250 ஆசிரியர்கள் வந்திருந்தனர். **Rev. Canon** மகாநாட்டைத் திறந்துவைத்தார். தலைவர் பிரசங்கத்தில் ஆசிரியத்தொழிலின் மேன்மையையும், ஆரம்பக் கல்வியின் குறைபாடு களையும், ஆசிரியர்களது நிலைமையை உயர்த்த வேண்டிய அவசியம்பற்றி யும், இவ்விதமகாநாடுகளின் முக்கியத்தையும்பற்றி விரிவாகப் பேசினார். பிறகு ஆசிரியர்நிலைமையும் கடமையும் என்பதுபற்றி ஸ்ரீ ஏ. எஸ். ராக வனும், ஆரம்ப ஆசிரியர் குறைகள் என்பதுபற்றி ஸ்ரீ சாரதாம்பாளும் பேசினார்கள். பிற்பகலில், யுத்தத்திற்குப்பின் இந்தியாவில் ஆரம்பக் கல்வி என்பதுபற்றி ஸ்ரீ ஏ. சுந்தரேசய்யர் பேசினார். பின்பு, யுத்த அலவன்ஸ், சம்பளதிட்டம், பாடதிட்டம், கிராண்டு, பிராவிடெண்டு பண்டு, சார்ஜண்டு கமிட்டிதிட்டம், முதலியனபற்றிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிவுரையில் ஆசிரியர்களும் மானேஜர் களும் ஏராளமாய் குழுமி இருந்ததைப் பாராட்டினார்.

---

## இந்து ஆரம்பபாடசாலை, கிடாரக்குளம்

7—10—43-ல், ஸ்ரீ குழந்தைவேலு முதலியார் தலைமையில் பெற்றோர் சங்கக்கூட்டம் நடைபெற்றது. கலைமகள் விழாவின் சிறப்பு, கல்வி, பெண்கல்வி முதலியனபற்றிப் பலர் பேசினார்கள். மாணவ மாணவிகள் சங்கீதம், கும்மி முதலியவைகளால் மகிழ்வித்தனர். கலை மகள் உருவவழிபாடு இனிது நடைபெற்றது.

---

## சோமசுந்தர வித்யாசாலை, கேமத்தான்பட்டி

1—10—43-ல், திரு. அருணாசலம் செட்டியார் தலைமையில், பெஸண்டு அம்மையார் தினமும், 2—10—43-ல், திரு. கரும்பஞ் செட்டி யார் தலைமையில் காந்தி தினக் கொண்டாட்டமும், 7—10—43-ல் வித் யாசாலை மாணவர்கள் புல்புல் சாரணப் படை ஆரம்பமும் நடைபெற்றன.

---

## போர்டு ஆசிரியர் யூனியன், கரூர்

21—8—43-ல், ஸ்ரீ வேணுகோபால் நாயுடு தலைமையில் ஸ்பெஷல் மகாநாடு கூடிற்று. யுத்த அலவன்ஸ், சார்ஜண்டு கமிட்டி சிபார்சு முதலியன பற்றி பல தீர்மானங்கள் நிறைவேறின. மாலைப் பொதுக் கூட்டத்தில் ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ முருகேச முதலியார் தலைமை வகித்து ஆசிரியர்களுக்குத் தம்மாலான உதவி புரிவதாகச் சொன்னார்.

---

## போர்டு பாடசாலை, ஆடுதுறை, லப்பைக்குடிகாடு

21—9—43-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சுப்ரமண்யம் தலைமையில் பெற்றோர் சங்கம் கூடிற்று. சுமார் 500 மக்கள் வந்திருந்தனர். நமது நாட்டு நிலை, பெண் கல்வி இவை பற்றி சொற்பொழிவு நடந்தது. மாணவ மாணவிகள் கும்மி கோலாட்டம் போட்டனர். திறமையாய் நடித்தவர்களுக்கு பரிசுகள் அளிக்கப்பட்டன.

---

## போர்டு ஆரம்ப பாடசாலை, வாங்கம்பாளையம்

10—10—43-ல், பெற்றோர் சங்க ஆண்டுவிழா, ஜில்லா கல்வி அதிகாரிக்கு உதவி ஸ்ரீ வீராசாமி பத்தர் தலைமையில் கொண்டாடப்பட்டது. இந்தியாவின் வருமானம், கல்வியின் அவசியம், யுத்தப் பிரசாரம், பெற்றோர் கடமை, கிராம முன்னேற்றம் முதலியன பற்றிப் பிரசங்கங்கள் நடைபெற்றன.

## பள்ளிக்கூட ஆசிரியர் அதிபர் தொடர்பு

# மூன்னறிக்கை விதியின் குறைபாடு

பள்ளிக்கூட ஆசிரியர் அதிபர் தொடர்பு வகையில் தற்போதுள்ள ஒப்பந்தப்படி இருசாராருள், எவரேனும் அத்தொடர்பினின்றும் விலகிக்கொள்ள விரும்பினல் மூன்று மாத முன்னறிக்கையுடன் தான் செய்யக்கூடுமென்று விதி ஏற்பட்டிருக்கிறது.

நடைமுறையில் இவ்விதி இவ்விருசாரார் தொடர்பையும் சரி, பள்ளிக்கூட நலனையும் சரி, மிகவும் கெடுப்பதாக யிருக்கிறது. அதிபர் ஆசிரியரை எக்காரணங்கள் கொண்டேனும் விலக்க எண்ணி முன்னறிக்கைவிடுத்தால் அதன் பின் ஆசிரியர் மூன்று மாதம் வேண்டாவெறுப்புடன்தான் வேலை பார்க்கவேண்டி வரும். மனக்கசப்பு, முன்கோபம் முதலியவை மிகுதியுள்ள இடத்தில் ஆசிரியர் வேண்டுமென்றே பிந்தி வரல் பள்ளிக்கு வராதிருத்தல், போதனையில் கருத்தில்லாதிருத்தல், ஆகிய வகையில் அதிபருக்கும் பள்ளிக்கூடத்திற்கும், தீங்கு செய்பவராய் விடுவதுமுண்டு.

நேர்மாருக ஆசிரியர் பிடித்தக் குறைவாலோ, வேறுநற்பணி கிடைப்பதாலோ இடம் மாற விரும்பி முன்னறிக்கை விடுத்தாராகுல், அப்போது அதிபர் அவருக்கு இடைஞ்சல் விளைவிக்கும் முறையில் அவர் வேலையில் வீண் குற்றம் காணவோ, சம்பளம் ஒழுங்காகத் தராமலிருக்கவோ வேறுவகையில் தகாத்தனமாய் நடக்கவோ எவ்வகையிலாவது குற்றம் சாட்டி அகற்றவோ, முயற்சி செய்யக்கூடும். இத்தகைய சமயங்களில் கலவரங்கள் நடந்து கேடு வருவித்துக்கொண்ட பள்ளிகளும் உண்டு.

ஆகவே இந்த மூன்றுமாத முன்னறிக்கை விதியை முற்றிலும் அகற்றவோ அப்படி முற்றிலும் அகற்ற முடியாவிட்டால் அதனை ஒரு மாதமாகவேனும் குறைக்கவோ செய்யவேண்டுவது. இருசாராருக்கும் பள்ளிகளுக்கும் நலந்தருமெனக் கருதுகிறேன்.

ஆசிரியர் அதிபர் ஆகிய இருசாராருள்ளும், பலர் இதனை ஏற்பதோடு, அரசியலாரும் ஆவன செய்வரென நம்புகிறேன்.

ஆ. பழநியப்ப செட்டியார்

# பத்திராதிபர் குறிப்பு

## சார்ஜெண்டு கல்வித் திட்டம்

நமது இந்திய நாட்டில் கல்வியறியாமையும் எழுத்தறியாமையும் ஒழியுமா என்று ஏங்குங்காலமாயிருக்கிறது. வருஷத்துக்கு 30 கோடி ரூபாய் விதம் செலவழித்து வந்தபோதிலும், 100-க்கு ஏழு பேரே எழுதப்படிக்கத் தெரிந்தவர் என்றால் நம் நாட்டின் நிலை என்னவென்று சொல்வது. இதிலும் ஸ்திரீகளில் எழுதப்படிக்கத் தெரிந்தவரின் கணக்கை வெளியிடுவதற்கே கைநடுக்குகின்றது. எழுத்தறியாமையை அறவே ஒழித்தால்தான் நாடு முன்னேற்றமடையக்கூடும். பிறநாடுகள் நம் நாட்டினர்களை மதிப்பார்கள். நம் நாட்டிலுள்ளோரும் சுகமாக வசிக்கக்கூடும். மகாத்மா காந்தியின் தலைமையில் தயாரித்த வர்தாக் கல்வித்திட்டம் இவ்வெழுத்தறியாமையை ஒழிக்கலாம் என்று எதிர்பார்க்க இடம் கொடுத்தது. ஆயினும் பல காரணங்களினால், இத்திட்டம் அமுலுக்கு வரவில்லை அமுலுக்குவந்த விடங்களில், அதன் நன்மையை நன்கு உணர்ந்தபோதிலும் இத்திட்டத்தை நடத்துவதற்கு வேண்டிய ஊக்கம் குறைந்து வருகிறது. இப்படி இருக்க இந்திய சர்க்காரின் கல்வி கமிஷனர், இந்தியாவிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் அடிப்படையான கல்வியைகட்டாயமாக அளிப்பதற்கும், தேர்ச்சியுள்ளவர்களுக்கு இலவச உயர்தரக்கல்வி, தொழில்கல்வி முதலியன அளிப்பதற்குமான ஒரு திட்டத்தைத் தயாரித்து, மத்திய ஆலோசனைக் கமிட்டிக்கு சமர்ப்பித்துள்ளதாகத் தெரியவருகிறது. இத்திட்டம் பரிபூரணமடைய 50 வருஷம் பிடிக்குமாம். முற்றிலும் பூர்த்தியாகும் காலத்தில் வருடமொன்றுக்கு 300 கோடி ரூபாய் பிடிக்கும் என்றும், அதில் 270 கோடி ரூபாய்கள் கவர்ன்மெண்டார் செலவிட வேண்டியிருக்குமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வளவு பணம் கிடைக்குமா என்ற கேள்வி, பலரைத் திகைக்கச்செய்யும். ஆனால் அவ்வளவு பணமும் 50 வருஷங்கள் முடிந்து திட்டம் பூராவும் அமுலுக்குவரும் காலத்தே வேண்டியிருக்கும். மேல்நாடுகளில், முக்கியமாக இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், கட்டாய அடிப்படைக் கல்வி எல்லோருக்கும் அளிப்பதென்று மேற்கொண்டகாலத்தின் பிறகு நாட்டின் செல்வமும், வியாபாரமும், வருமானமும் அதிகரித்தது. அதினாலேயே, இப்பொழுதும், இங்கிலாந்தில் கல்விசீர்திருத்தச் சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது செலவிடும் 150 கோடி ரூபாயைக் காட்டிலும் அதிகமாக செலவிடவேண்டியதிட்டம் அது. ஒருவரும் இவ்வளவு பணத்துக்கு

எங்குபோவது என்று ஏங்கவேயில்லை. கல்விச்செல்வமே பெரும் செல்வம் என்று அவர்கள் அறிந்துள்ளார்கள். கல்வி அபிவிருத்தியினால் நாட்டின் செல்வம் அதிகரிப்பது நிச்சயமானால், கல்விதிட்டத்திற்கு வேண்டிய பணம் கிடைத்துவிடும். அதேநம்பிக்கை நம்நாட்டிலும் உண்டாக வேண்டும். அதே தைரியமும் நமது அரசாங்கத்தாருக்கு வரவேண்டும். மிஸ்டர் சார்ஜெண்டு, அவர் தயாரித்துள்ள யாதாஸ்து மேல் நாடுகளில் இருந்துவரும் திட்டத்தை லக்ஷியமாக கொண்டிருக்கிறதென்று சொல்லியுள்ளார். 6 முதல் 14 வயதுக்குட்பட்ட எல்லா பாலர்களுக்கும் கட்டாய முறையில் இலவசக்கல்வி அளிக்கப்படவேண்டுமென்று மிஸ்டர் சார்ஜெண்டு வற்புறுத்துகிறார். கலாசாலைகளில் உயர்தரக்கல்வியென்றும், தொழிற்கல்வியென்றும் இருபிரிவுகளாக பிரிக்கப்படுமாம். அத் தொழிற்கல்வியும் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்றபடி அமைக்கப்படும். நம் நாட்டுக் கல்விதிட்டம் பெரும்பாலும் புத்தகப் படிப்பாகவும், குமாஸ்தாக்கள் தயாரிப்பதற்குமே லாயக்காயுள்ளது என்று ஒரு முக்கிய குறை. இதை நீக்க, மிஸ்டர் சார்ஜெண்டு கண்டுள்ளதுபோல் தொழிற்கல்வி அவசியம்.

பாலர்களின் தேக ஆரோக்கியமும் சுகாதாரமும் நன்கு கவனிக்கப்படுவதின் அவசியத்தை மிஸ்டர் சார்ஜெண்டு வற்புறுத்தி யுள்ளது பாராட்டத்தக்கது. அவர் குறிப்பிட்ட வழியில் ஆரோக்கியப் பகுதியை நிறைவேற்ற 7500 டாக்டர்களும் 15,000 நர்ஸுகளும் வேண்டியிருக்குமாம்.

இத்திட்டத்தின் பலபாகங்களும் வெளியிடப்படவில்லை. பத்திரிகைகளில் வெளிவந்துள்ள சில அம்சங்களைக் கவனித்தால் இது பல சிறப்பான அம்சங்களைக் கொண்டிருக்கிறதென்றே கருதவேண்டும். நமது புதிய வைசிராயும், கல்வியின் அவசியத்தை மிக வலியுறுத்திபேசியுள்ளார். எனவே, மத்திய கமிட்டியார் பரிசீலனை செய்து இத்திட்டத்தை மாகாண சர்க்கார்களுக்கு அனுப்பியபிறகு, மத்தியசர்க்காரும் மாகாண சர்க்கார்களும் யோசித்து, பறந்த நோக்கத்துடனும், தைரியத்துடனும், நம்பிக்கையுடனும், இத்திட்டத்தை சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டுவந்து இந்தியாவின் நிலையை உயர்த்த முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

---

குறிப்பு:—காகிதம் கிடைக்காததால் இந்த இதழ் பிரசுரிக்கத் தாமதப்பட்டது. வாசகர்கள் தயவுசெய்து மன்னிக்கவும். அடுத்த இதழ் முதல் பழையபடி பிரசுரிக்கப்படும்.

**S. I. T. U. PROTECTION FU D, LTD., MADRAS**

520, High Road, Triplicane, Madras.

## நீங்கள்

## இந்த நிதியில்

## சேர்ந்து விட்டீர்களா?

| | | | |
|---|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... | ... | ரூ. 2,47,115 |
| பாலிஸிக்கள் | ... | ... | 1,371 |
| யூனிட்டுகள் | ... | ... | 2,585 |

ஆக்சுவரியின் பரிசோதனையில்,

நல்ல லாபம் காணப்படுகிறது!

**ரூபாய்க்கு 2 அணா விகிதம் போனஸ்**

கொடுக்கலாமென்று அபிப்ராயப்படுகிறார்.

**உடனே சேருங்கள்!**

வி. ஸ்ரீநிவாஸன், காரியதரிசி.

Regd. No M. 3473




# புதிய எண்ணங்களுக்கு

மாணவர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் டீயை மிக விரும்புவதேன்? டீ மூளைக்கு ஊக்கமளித்து புதிய புதிய எண்ணங்களை வெளியிட உதவுவதால் தான். மற்றெந்த பானத்திற்குமில்லாத ஓர் விசேஷ குணம் டீக்கு உண்டு. அது மூளையை சுருசுருப்பாக்கி கற்பனை சக்தியை விருத்தி செய்யும் குணமே. புதிய எண்ணங்களைப் பெற டீ அருந்துங்கள்.




டீ தயாரிக்கும் முறை: சுத்தமான தண்ணீரைக் கொதிக்க வைத்து ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும், அதிகமாக ஒரு ஸ்பூன் அளவும், நல்ல இந்திய தேயிலையைப் போட்டு கொதிக்கும் ஜலத்தை விட்டு, ஐந்து நிமிஷம் கழித்து வடிகட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

# இந்தியன் டீ

சர்வ சாதாரணமான பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

I.K.147.V


Printed by K. Sadagopachariar at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Publishe
Mr. M.S.Sabhesan, M.A., for "The South India Teachers Union." 220 High Road, Triplicane Mad